**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.89/2017**

**Prosecution witness : 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயக்குமார் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent.PFA)

**09.05.2023**

**முதல் விசாரணை**

நான் விளாச்சேரியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். சாட்சி 1 பாண்டியம்மாள் எனது உறவினர் ஆவார். எனக்கு எதிரி ராஜேந்திரனை தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இரவு 8.45 மணியளவில் நான் எங்கள் ஊர் கண்மாய்க்கு குளிக்கச் சென்றிருந்தேன். அப்போது ஒரு பெண் அலறும் சத்தம் கேட்டது. அதை கேட்டு நான் ஓடிச் சென்று பார்த்த போது சாட்சி பாண்டியம்மாள் சீமைக் கருவேல முள்ளில் கிடந்தார். அவருக்கு வலது கால் காயமாக இருந்தது. என்னவென்று கேட்ட போது எதிரி ராஜேந்திரன் என்னை பலாத்காரம் செய்ய வந்தார். எனது செயின் மற்றும் தோடை பறிக்க வந்தார் என கூறினார். நான் சத்தம்போட்டு ராஜேந்திரனை பிடிக்க சென்ற போது அவர் ஓடிவிட்டார். எதிரி ராஜேந்திரனை பார்த்தால் நான் அடையாளம் காட்டுவேன். பின்பு பாண்டிம்மாளை கூட்டிக் கொண்டு ஊருக்குள் சென்றேன். பின்பு திருநகர் காவல் நிலையம் சென்று பாண்டியம்மாள் புகார் கொடுத்தார். போலிசார் அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி**. இல்லை